செ.வெ.எண்: 59 / ஜுலை / 2021 நாள்:15.07.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிகளுடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் 2021—2022 ஆம் ஆண்டுக்கான தனி நிதிநிலை அறிக்கை தொடர்பாக கருத்துக் கேட்புக் கூட்டம் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் ஆகியோர் தலைமையில் இன்று (15.07.2021) நடைபெற்றது.**

---------------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிகளுடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் 2021—2022 ஆம் ஆண்டுக்கான தனி நிதிநிலை அறிக்கை தொடர்பாக கருத்துக் கேட்புக் கூட்டம் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள், ஆகியோர் தலைமையில் இன்று (15.07.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயத்திற்கென்று தனி நிதிநிலை அறிக்கை வழங்கப்படும் என்ற அறிவித்தற்கிணங்க நமது வேளாண்துறை அமைச்சர் அவர்களால் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று அந்தந்த மாவட்டங்களுக்கு ஏற்றவாறு எப்படி இந்தப்பயிர் உற்பத்தியை இரட்டிப்பாக்குவது என்பது குறித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 திட்டங்கள் அறிவித்துள்ளதில் வேளாண்மை பரப்பளவை 2 மடங்காக உயர்த்துவது, அதோடு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு இரண்டுபோக சாகுபடியை கொண்டுவரும் திட்டத்தையும் செயலாக்கம் செய்திடும் வகையிலும் இதைப்பற்றி ஆலோசிக்கவும், ஏற்கனவே தரப்பட்டிருக்கும் விதைகள், பூச்சிமருந்துகள், உரங்கள் உட்பட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசு சார்பாக என்ன திட்டங்கள் கொண்டு வர வேண்டும் என்று அறிந்து கொள்வதற்காகவும் விவசாயிகள் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்கு உறுதுணையாக இருப்பார்கள். கடந்த 2 நாட்களுக்கு முன்பு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் துறை செயலாக்கக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய முதல் வார்த்தை திட்டம் போடும்போது ஆங்காங்கே தடுப்பணை கட்டுவதற்கு திட்டமிடவேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள். எனவே விவசாயிகளுக்கும், விவசாயத்திட்டங்களுக்கும் முன்னுரிமை வழங்கி திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது தெரிவித்தார்.

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது:

தேர்தல் அறிக்கையில் அறிவித்தப்படி இந்தியாவிலேயே முதன்முறையாக வேளாண்மைத்துறைக்கென தனிநிதிநிலை அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்காக துறையின் உயர் அலுவலர்கள் அனைவரும் வருகை தந்து விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்து, பதிவு செய்து அதன் பேரில் நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்காக கூட்டம் நடைபெறுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி விவசாயிகளுக்கான திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அரசு செயலர் திரு.கே.சி.சமயமூர்த்தி,இ.ஆ.ப., வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை இயக்குநர் திரு.ஆ.அண்ணாதுரை இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் திரு.முனைவர்.மா.வள்ளலார் இ.ஆ.ப.,தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திருமதி.மரு.பிருந்தாதேவி இ.ஆ.ப., சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் திரு.எம்.அன்பழகன்,இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள், வேளாண் பொறியியல்துறை தலைமைப் பொறியாளர் திரு.முருகேசன், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றிதழ் துறை இயக்குநர் திரு.சுப்பையா, இணை இயக்குநர் (வேளாண்மை)திரு.முருகேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.சௌந்தரபாண்டியன், திரு.செ.ஸ்டாலின் குமார், திரு.ந.தியாகராஜன், திரு.எம்.பழனியாண்டி, திரு.எஸ்.இனிகோ இருதயராஜ், திரு.சீ.கதிரவன், திரு.பி.அப்துல்சமது, திரு.எம்.பிரபாகரன், டாக்டர்.வை.முத்துராஜா, திரு.க.சொ.க.கண்ணன், திரு.கு.சின்னப்பா, மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர்கள் திரு.தர்மன் ராஜேந்திரன், குன்னம் திரு.சி.ராசேந்திரன் மற்றும் விவசாயிகள்/விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**